இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய

பகுதி II இற்குக் குறைநிரப்பி

(05.01.77 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது)

# நீதி நிருவாகம் (திருத்தம்)

1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

நீதி அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# நீதி நிருவாகம் (திருத்தம்)

ச. வ.—ஓ. 38/76
988

### 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்**

1. இச்சட்டமானது, 1976 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நீதி நிருவாகத் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.**

2. 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்திற்கான அட்டவணையானது, " நீதிபதிகளின் வேதனங்கள் " என்ற தலைப் பின்கீழ்—

" மாவட்ட நீதிபதி—தரம் 2—ஆண்டொன்றுக்கு ரூபா 18,240—600—20,640

நீதிவான்—ஆண்டொன்றுக்கு ரூபா 13,440—480/600—20,640 ",

என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

" மாவட்ட நீதிபதி—தரம் 2—ஆண்டொன்றுக்கு ரூபா 18,240—6×600—21,840.

நீதிவான்—ஆண்டொன்றுக்கு ரூபா 13,440—5×480—10×600—21,840 ".

2—எ 24353—6940 (7612)